செ.வெ.எண்.201 நாள்.23.03.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 4 விவசாயிகளுக்கு மானியத்திலான பவர் ஸ்பிரேயர் மற்றும் கால்நடைகளுக்கான தீவன குச்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ)/ மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று (23.03.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 331 மனுக்களில் வேளாண்மையைச் சார்ந்த 203 மனுக்கள் மற்றும் வேளாண்மை சாராத 128 மனுக்களுக்கும் பதில்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், வேளாண்மைத் துறையின் மூலம் 2 விவசாயிகளுக்கு மானிய விலையிலான பவர் ஸ்பிரேயர்களையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 2 விவசாயிகளுக்கு மானியத்திலனா கால்நடை தீவன குச்சிகளையும் என மொத்தம் நான்கு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) அவர்கள் பேசியதாவது—

திருநெல்வேலி மாவட்டத்தில் 2018ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் தேதி முடிய 97.67 மி.மீ. மழை பெய்துள்ளது. தற்போது மாவட்டத்திலுள்ள அணைகளில் 21.6 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 13 சதவீதம் நீர் இருப்பு மட்டுமே இருந்தது. மாவட்டத்தில் பிசான பருவத்தில் 60,230 எக்டேர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு தற்போது அறுவடை பணிகள் நடைபெற்று வருகிறது.

விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதார விலையினை விட குறைவாக வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்வதை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1660/—ம், இதர ரகங்கள் குவிண்டாலுக்கு ரூ.1600/— ஆக தமிழக அரசால் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யப்பட்டு கொள்முதல் பணிகள் நடைபெறுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2016—17ம் ஆண்டு காப்பீடு செய்யப்பட்ட மக்காளச் சோளம் பயிர்களுக்கு காப்பீடு செய்த 7221 கடன் பெற விவசாயிகளுக்கு ரூ.22.22 கோடி இழப்பீட்டுத் தொகையும், பசிப்பயிறு காப்பீடு செய்த 2666 விவசாயிகளுக்கு ரூ.7.52 கோடி இழப்பீட்டுத் தொகை விடுவிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2116—2017ம் ஆண்டு இதுவரை நெற்பயிர் சாகுபடி செய்த 8730 விவசாயிகளுக்கு ரூ.7.51 கோடியும், உளுந்து சாகுபடி செய்த 20205 விவசாயிகளுக்கு ரூ.48.66 கோடியும் பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை 39322 விவசாயிகள் ரூ.85.91 கோடி பயிர் காப்பீட்டுத் தொகை பெற்று பயனடைந்துள்ளனர். பருத்தி காப்பீடு செய்த 1527 விவசாயிகளுக்கும், கரும்பு பயிர் காப்பீடு செய்த 228 விவசாயிகளுக்கும் இழப்பீடு தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2016ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகள் 457 நபர்களுக்கு அரசிடமிருந்து ரூ.14.56 இலட்சம் இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. வறட்சி நிவாரணம் வழங்கிய போது விடுப்பட்டுள்ள 1267 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மரம் கணக்கெடுப்பு பணியினை வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வனத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான விதை, உரங்கள், பூச்சி மருந்துகள் இருப்பில் உள்ளது. விவசாயிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளின் கோரிக்கை மனுக்களின் மீது அனைத்து துறை அலுவலர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, துணை இயக்குநர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கஜேந்திரன்நாதன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் திரு.அற்புதம் மற்றும் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.